**எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் உரிய நிதியேற்பாட்டினை மேற்கொள்ளாது, திறைசேரி உண்டியல்களை வெளியிட்டு ரூபா 47,472,450,000 ஆன தொகை | எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புகள் தொடர்பில் மேலதிக |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 26,673,196,758 ஆன நிதிப் பொறுப்புகள் தொடர்ந்தும் நிலவியதுடன், 2022 யூன் 15 ஆந் திகதியளவில் அவற்றுள் ரூபா 1,107,478,000 விடுவிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையை விடுவிப்பதற்கு நிதியத்திடம் போதிய பணம் காணப்படவில்லை. இதன் காரணமாக நிதியத்தின் நட்டமடையும் தன்மை தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மையொன்று நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஏப்ரல் 02ஆந் திகதிய 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும், அதற்குரிய பிரிவுகள் மற்றும் 2020 மார்ச் 31ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் 02ஆம் பந்தியின் பிரகாரம், மேற்படி நிதியத்தின் முகாமைத்துவத்திற்காக குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியதுடன், அந்த முகாமைத்துவக் குழுவின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட கட்டளைகள் தொடர்பிலான விபரங்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | MFE/ERD/17/CM/2020/072 அமைச்சரவை குறிப்பின் பிரகாரம், நிதியத்தின் முகாமைத்துவ பணிகளுக்காக ஐந்து அங்கத்தவர்களை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய குறித்த பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், அந்த குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர். | முறையான நியமனங்கள் மேற்கொள்ளல் மற்றும் கட்டளை பிறப்பிக்க வேண்டும். |
| (இ) | எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தினை அமைப்பதன் நோக்கம் விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துவதும் நிலையான விலையை பராமரிப்பதும் ஆகும். உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ள போதிலும் இறக்குமதியின் போது மிகைக் கட்டணத்திற்கு இணையான விலையில் எரிபொருளை விற்பனை செய்வதால் 2020 மார்ச் முதல் 2021 சனவரி மாதம் வரையான காலப்பகுதியினுள் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் | பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை மேம்படுத்தி எரிபொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதே பிரதான நோக்கமாக இருந்தது. இதன்படி, 2020 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் முதல் காலப்பகுதியிலும் உலக சந்தையில் எரிபொருள் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், கடந்த எரிபொருள் விலை திருத்தம் | உலக சந்தையில் விகைள் குறைவடைவதன் நன்மைகள் மிகவும் பயனுள்ள நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 22,434,531,371 என்ற திரண்ட தேறிய மிகையொன்றினை ஈட்டியிருந்தது. உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் பட்சத்தில் உள்நாட்டு விலையை நிலையாகப் பேணுவதற்கு குறித்த மிகையை ஒரு திரவ சொத்தாகப் பேண முடியும் என்றாலும், அமைச்சரவைத் தீர்மானத்தில் இது குறிப்பிடப்படவில்லை என்பதுடன், அங்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதியிலிருந்து ரூபாய் 48 பில்லியன் தொகையானது மின்சார சபைக்கு மூலதனப் பங்களிப்பாக 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டு, அது 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் முதலீடுகளின் கீழ் இது காண்பிக்கப்பட்டிருந்தது. | வரையில் விலையை நிலையாக வைத்திருக்க முடியும். இந்த பொறிமுறையானது எரிபொருள் விலையை மட்டுமன்றி மின்சாரக் கட்டணத்தையும் நிலையானதாகப் பேணுவதற்கு வழிவகுத்துள்ளதால் நிதியானது அதன் நோக்கத்திலிருந்து விலகவில்லை என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். | |

### 1.5.2 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்கு தொடர்ந்தியங்கும் நிலைமை இல்லையென்பது முகாமைத்துத்தினால் தீர்மானிக்கப்பட்ட காரணத்தால், பொது முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் முறையான நிதியேற்பாட்டினை மேற்கொள்ளாது, நிதியத்தினால் இலங்கை மின்சார சபையின் மூலதனப் பங்களிப்பிற்காக முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 48,000,000,000 தொகையானது நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. நடைமுறையில் அது அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் பின்னர் வரும் பன்னிரண்டு மாதக் காலப்பகுதியினுள் தீர்வை செய்யப்படும் விதம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒரு பொதுத்துறை நிறுவனம் அதன் தொடர்ச்சியான இருப்புக்கான நிதியின்மை அல்லது பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை பாதிக்கும் கொள்கை முடிவுகளை அரசு எடுக்கும்போது அல்லது அதன் தொடர்ந்தியங்கும் நிலை பற்றிய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை ஏற்படலாம். அதற்கு, அடுத்த சில ஆண்டுகளில் உலக சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலையை எதிர்பார்க்க முடியாமை, அந்நிய செலாவணி விகிதங்களில் சாதகமான மாற்றத்தை கணிக்க முடியாமை மற்றும் இந்த நிதிக்கு விரிவான வருமான ஆதாரங்கள் இல்லாதிருந்ததுடன், எரிபொருள் விலையில் அடிப்படையில் விதிக்கப்படும் மிகைக் கட்டணம் மட்டுமே ஒரேயொரு வருமான மூலமாக உள்ளமை போன்ற விடயங்களும் காரணமாக அமைந்துள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டியமை. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நி.பி. 876 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 149 ஆம் உறுப்புரைக்கு புறம்பாக வருமானம் சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ள பாராளுமன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிராத போதிலும், 2020 மார்ச் 18 ஆந் திகதி முதல் நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நி.பி. 876 பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய பாராளுமன்ற அங்கீகாரம் 2022 யூலை 11 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதியத்தை கலைப்பதற்கு முறையான அனுமதியைப் பெறுவதற்கும், அத்தகையவற்றைப் பெற்ற பிறகு, அதன் பரிவர்த்தனைகள் மற்றும் பொறுப்புகளைத் தீர்ப்பது தொடர்பான பொது திறைசேரியினால் பொறுப்பேற்றல், கலைத்தல் போன்றன தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசியலமைப்பின் விதிகளின்படி செயல்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 728,619,209 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,705,911,662 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,977,292,453 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இலங்கை சுங்கத்திலிருந்து கிடைத்த மிகைக் கட்டணங்களை அகற்றுதல் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

**நிதியத்தை தாபித்தல் மற்றும் பேணிச் செல்லல்**

2020 மார்ச் 11 ஆந் திகதி வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரியின் செயலாளரினூடாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்ளை அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்ட குறிப்பிற்கமைய, 2020 மார்ச் 09 ஆந் திகதியளவில் சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலை 42.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், அது அப்போது பீப்பாயொன்று ஐ.அ.டொலர் 34.63 ஆக காணப்பட்டதாகவும், 2019 செப்தம்பர் மாதமளவில் அது ஐ.அ.டொலர் 59.73 ஆன காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட கணிப்பீடுகளுக்கமைய மசகெண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தமையால் எரிபொருள் லீட்டரொன்றின் விலை பின்வருமாறு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

| | விலைச் சீராக்கம் (லீட்டருக்கு) அண்ணளவாக |
|---|---|
| | ரூபா |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 12 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 15 |
| ஒட்டோ டீசல் | 14 |
| சுப்பர் டீசல் | 20 |

இந்த விலை வீழ்ச்சியின் நலன், வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகைகள் ஆகியவற்றை அறவீடு செய்த பின்னர் மொத்த நிதியேற்பாட்டினையும் பொதுமக்களுக்கு வழங்குதல், வரி அறவீட்டினை அதிகரித்து மொத்த நலனையும் அரச வருமானத்திற்கு பெற்றுக்கொள்ளல், எரிபொருளின் சில்லறை விலையினை குறைத்தல் மற்றும் எரிபொருள் விலையில் மாற்றங்களை மேற்கொள்ளாது எரிபொருள் விநியோக நிறுவனங்களால் இறுதி 05 மாதங்களினுள் வழங்கப்பட்டுள்ள நட்டத்தினை ஈடுசெய்வதற்கான 04 மாற்றுவழிகளின் கீழ் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

*முகாமைத்துவத்தின் கருத்துரை:* இணங்குகின்றேன்.

எவ்வாறான போதிலும், வர்த்தக மற்றும் முதலீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பின் (ஆ) பந்திக்கமைய ஒட்டோ டீசலுக்காக ரூபா 11, பெற்றோல் 95 ஒக்டேனுக்காக ரூபா 15, சுப்பிரி டீசலிற்காக ரூபா 20 எனுமாறு விலை குறைப்பின் சேமிப்பிற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மிறை அறவீட்டினை மேற்கொள்வதற்கு அல்லது சந்தை விலையினை குறைப்பதற்காக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம், 2020 மார்ச் 13ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 2166/35ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பின்வருமாறு எரிபொருள் தொடர்பில் தீர்வை வரியுடன் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடு 2020 மார்ச் 14ஆந் திகதி முதல் 02 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் வகையில் விதிக்கப்பட்டிருந்தது.

| | **மிகைக் கட்டணம் (லீட்டருக்கு)**<br>**ரூபா** |
|---|---|
| பெற்றோல் 92 ஒக்டேன் | 0 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 15 |
| ஒட்டோ டீசல் | 11 |
| சுப்பர் டீசல் | 20 |

பின்னர் சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலையில் தளம்பல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பின்வருமாறு மிகை அறவீட்டு பெறுமதியுடைய விசேட வர்த்தமானியினூடாக திருத்தப்பட்டிருந்தது.

| **வர்த்தமானி இலக்கம்** | **திகதி** | **பெற்றோல் 92 ஒக்டேன் ரூபா** | **பெற்றோல் 95 ஒக்டேன் ரூபா** | **ஒட்டோ டீசல் ரூபா** | **சுப்பர் டீசல் ரூபா** |
|---|---|---|---|---|---|
| 2172/6 | 2020.04.22 | 26 | 49 | 24 | 40 |
| 2181/13 | 2020.06.24 | 0 | 20 | 12 | 30 |
| 2189/57 | 2020.08.23 | 0 | 20 | 12 | 30 |
| 2203/1 | 2020.11.23 | 0 | 20 | 12 | 30 |
| 2213/7 | 2021.02.01 | 0 | 0 | 0 | 0 |

2021 பெப்ரவரி 01ஆந் திகதி வெளியிடப்பட்ட 2213/7 ஆம் இலக்க அதிவிசேட

வர்த்தமானியினூடாக 2020 நவம்பர் 23 ஆந் திகதிய 2203/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்ட விதி 2021 பெப்ரவரி 02 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இரத்துச்செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரித்த காரணத்தால் இந்த மிகைக் கட்டணம் அகற்றப்பட்டிருந்த காரணத்தால் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதித்தின் ஊடாக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு 2022 யூன் 15 ஆந் திஜகதி வரையிலும் செலுத்துவதற்குள்ள ரூபா 25,565,718,758 தொகையான கொடுப்பனவுகளுக்காக நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 பெப்ரவரி 20 ஆந் திகதி முதல் லீட்டருக்கு அறவிடப்பட வேண்டிய இந்த மிகைக் கட்டணம் பூச்சியமாகியிருந்தது. அதற்கமைய இந்த தொகையை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் பிரச்சினையான நிலைமையொன்று உருவாகியிருந்தது. | எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் பொறுப்புகள் உரிய முறையில் தீர்ப்பனவு செய்ய வேண்டியமை. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினூடாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 26,673,196,758 ஆன போதிலும், அந்த பெறுமதிக்குரிய திறைசேரி உண்டியல்களின் முகப்பெறுமதி ரூபா 29,200,746,758 ஆனமையால், அவற்றுக்கிடையிலான வேறுபாடான ரூபா 2,527,550,000 தீர்ப்பனவு செய்வதற்காக 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் தெளிவான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2020 மார்ச் 31 ஆந் திகதி பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம், நிதி அமைச்சின் ஆண்டறிக்கையுடன் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தின் பொழிப்பாக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்று வெளியிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு வெளியிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தகவல்கள் அறிக்கையிடப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2021 சனவரி 18 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், எரிபொரு விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினை வலுப்படுத்துவதற்காக ரூபா 48 | தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை காரணமாக | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்தினை வலுவூட்டுவதற்கு |

| | | |
|---|---|---|
| பில்லியன் நிதி பொது திறைசேரியிலிருந்து விடுவிக்கும் நோக்கில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறைசேரியின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதுவரை ரூபா 48 பில்லியனான தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |